

மன்னார்குடி வருவாய் கோட்டம், மன்னார்குடி நகரம், ராமாபுரத்தில் உள்ள நரிக்குறவர் சமுதாய 89 குடும்பங்களுக்கு 66.75 லட்சங்கள் மதிப்பீட்டிலான இலவச பட்டாக்களை தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா வழங்கினார். உடன் நகர்மன்ற தலைவர் மன்னை த. சோழராஜன், நகரச் செயலாளர் வீரா. கணேசன் , வருவாய் கோட்டாட்சியர் யோகராஜன் உள்ளிட்டோர் உள்ளனர்.

### சேலம் கோட்டம் – விழுப்புரம் கோட்டத்தைச் சேர்ந்த

# 554 போக்குவரத்துப் பணியாளர்களுக்கு ஓய்வூதியப் பயன்கள்!

## அமைச்சர்கள் – இரா.இராஜேந்திரன் – எஸ்.எஸ்.சிவசங்கர் வழங்கினர்!

சேலம், மார்ச் 13 -

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் மற்றும் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆகியோர் போக்குவரத்துக் கழக ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு ஓய்வு கால பணப்பலன்களை வழங்கினார்கள்.

சேலம், ராமகிருஷ்ணா சாலை, தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக சேலம் கோட்ட தலைமை அலுவலகத்தில் சுற்று லாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் மற்றும் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆகியோர் போக்குவரத்துக் கழக ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு ஓய்வு கால பணப்பலன்களை வழங்கினார்கள்.

**இந்நிகழ்ச்சியில் சுற்று லாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் பேசியதாவது,**

முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள பொதுமக்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக, புதுமைப் பெண், தமிழ்ப்புதல்வன், மகளிர் விடியல் பயணத்திட்டம், தோழி விடுதிகள், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, முதலமைச்சரின் காலை உணவு திட்டம், மக்களைத் தேடி மருத்துவம், நலம் காக்கும் ஸ்டாலின் உள்ளிட்ட பல்வேறு திட்டங் களை இந்தியாவில் உள்ள பிற மாநிலங்கள் பின்பற்றும் வகையில் செயல்படுத்தி வருகிறார்கள்.

அந்த வகையில், போக்குவரத்துத்துறையில் முதலமைச்சர் அவர்கள் பொதுமக்கள் எளிதாக பயணம் செய்யும் வகையில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிராமங்களுக்கும் போக்குவரத்து வசதி ஏற்பாடு செய்து தந்துள்ளார்கள். மேலும், எந்த மாநிலங்களிலும் இல்லாத வகையில் மின்சார பேருந்துகள், compressed natural gas பொருத்தப்பட்ட பேருந்துகள், டீசல் பேருந்துகள் என போக்குவரத்துத்துறையில் பல நவீன மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளார்கள்.

அதன் தொடர்ச்சியாக முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் போக்குவரத்துத்துறையில் பணியுரியும் தொழிலாளர்கள் மகிழ்ச்சியுடனும் மற்றும் ஓய்வு பெற்ற பணியாளர்கள் மனநிறைவுடனும் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் அவர்களுக்கான ஓய்வு கால பணப்பலன்கள் வழங்க மார்ச் 2026 வரை ரூ.2,446 கோடி நிதி ஒதுக்கிடு செய்யப்பட்டு இன்றைய தினம் வழங்கப்படுகிறது. அந்த வகையில் இன்றைய தினம் சேலம் கோட்டத்தை சார்ந்த 354 ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கும் மற்றும் விழுப்புரம் கோட்டத்தை சார்ந்த 200 ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கும் ஓய்வூதியப் பணப்பலன்கள் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் பேசினார்.

**இந்நிகழ்ச்சியில், போக்குவரத்து மற்றும் மின்சா ரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசியதாவது**

முதலமைச்சர் அவர்களின் சிறப்பான ஆட்சியால் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகமானது வலுவான கட்டமைப்பு மற்றும் வலுவான அடித்தளத்தை கொண்டு அனைத்து கிராமங்க ளுக்கும் பேருந்து வசதிகள், அதிக பேருந்துகள் மற்றும் 1,02,000 தொழிலாளர்களை கொண்ட சிறந்த நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. போக்குவரத்து தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம், முறையான சம்பளம், அகவிலைப்படி உயர்வு ஆகியவை வழங்கப்பட்டு வருகிறது. மேலும் சென்னை மாநகர போக்குவரத்து கழகம் இந்தியாவில் சிறந்த போக்குவரத்து நிறுவனம் என்ற விருது பெற்றுள்ளது.

முதலமைச்சர் அவர்களின் விடியல் பேருந்து பயணத்திற்காக ரூ.13,760 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் காரணமாக மகளிர் பேருந்து பயணம் செய்பவர்களின் எண்ணிக்கை 40 சதவீதத்திலிருந்து 70 சதவீதமாக உயர்ந்துள்ளது. அதே போன்று முதலமைச்சர் அவர்கள் பொதுமக்கள் எளிதான பயணம் மேற்கொள்ளும் வகையில் புதிய பேருந்துகள் வாங்குவதிலும் தனிக்கவனம் செலுத்தி மொத்தமாக 13,000 புதிய பேருந்துகள் வாங்குவதற்கு உத்தரவிட்டு தற்போது வரை 8,200 பேருந்துகள் வாங்கப்பட்டுள்ளது. மேலும், மின்சார பேருந்துகள், சி.என்.ஜி பேருந்துகள் ஆகிய பேருந்துகளின் சேவைகளும் வழங்கப்பட்டு வருகிறது.


பொதுமக்கள் வெளிநாட்டில் பார்த்து ரசித்த பேருந்துகள் தமிழ்நாட்டில் தற்போது இயக்கப்பட்டு வருகிறது. இந்த பேருந்து சேவைகளை இயக்குகின்ற போக்குவரத்து தொழிலாளர்கள் மனமகிழ்வுடன் இருக்க வேண்டும் என்ற நோக்கில் அவர்களின் அனைத்து கோரிக்கைகளையும் நிறைவேற்றி வருகிறார்கள். கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பணியாளர்களின் கோரிக்கையான ஊதிய ஒப்பந்தம் சரிசெய்யப்பட்டு முதல் பேச்சுவார்த்தையில் 5 சதவிகிதம் ஊதிய உயர்வும், இரண்டாம் பேச்சுவார்தையில் 6 சதவிகிதம் ஊதிய உயர்வும் வழங்க ப்பட்டது. மேலும், தொழிலாளர்கள் நலன் காக்கும் முதல்வராக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் திகழ்ந்து வருகிறார்கள்.

அந்த வகையில் தமிழ்நாடு முழுவதும் போக்குவரத்துத்துறையில் பணியுரியும் தொழிலாளர்கள் மகிழ்ச்சியுடனும் மற்றும் ஓய்வு பெற்ற பணியாளர்கள் மனநிறைவுடனும் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் அவர்களுக்கான ஓய்வு கால பணப்பலன்கள் வழங்க மார்ச் 2026 வரை ஓய்வு பெறுபவர்களுக்கு ரூ.2,446 கோடி நிதி ஒதுக்கிடு செய்யப்பட்டு, இன்றைய தினம் ஆகஸ்ட் 2024 முதல் ஜனவரி 2026 வரை ஓய்வுபெற்ற 6,257 பணியாளர்களுக்கு ரூ.2,201 கோடி தமிழ்நாடு முழுவதும் வழங்கப்படுகிறது. குறிப்பாக சேலம் கோட்டத்தை சார்ந்த 354 ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கும் மற்றும் விழுப்புரம் கோட்டத்தை சார்ந்த 200 ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கும் ஓய்வூதியப் பணப்பலன்கள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு முழுவதும் ஓய்வு காலத்தில் உயிர் நீத்த போக்குவரத்து தொழிலாளர்களின் வாரிசுகள் 1,500 நபர்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக இதில் பெரும்பாலும் பெண்கள் பணிநியமன ஆணை பெற்று வருகிறார்கள் என்பது பெரு மைக்குரியது. இவ்வாறு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசினார்.

இதனைத் தொடர்ந்து, சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் மற்றும் போக்குவரத்து மற்றும் மின்சா ரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் ஆகியோர் காணொலி காட்சி வாயிலாக சென்னை மாநகர போக்குவரத்து கழகம் சார்பில் கூடுதல் வசதிகளுடன் கூடிய 5 புதிய தாழ்த்தள மின்சார குளிர்சாதன பிரிமியம் பேருந்து சேவையினை தொடங்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், போக்குவரத்துத்துறை அரசு முதன்மைச் செயலாளர் ஷீன்சோங்கம் ஜடக் சிரு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர்கள் வெ.குணசேகரன் (சேலம் கோட்டம்), க.குணசேகரன் (விழுப்புரம் கோட்டம்) உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கரூர் மாநகராட்சி, கோதை நகரில், ரூ 38.50 கோடி மதிப்பில், 64000 சதுர அடியில், தரை மற்றும் 4 தளங்களுடன், அதி நவீன வசதிகள் கொண்ட மினி டைடல் பூங்காவிற்கு காணொளி வாயிலாக அடிக்கல் நாட்டினார்கள் .இதனையடுத்த நிகழ்வுக்கு கரூர் மாவட்ட ஆட்சியர் கு. ரவிகுமார் தலைமை வகித்தார். கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில்பாலாஜி சிறப்புரையாற்றினார். அருகில் சட்டமன்ற உறுப்பினர்கள், ஆர்.இளங்கோ, க.சிவகாமசுந்தரி, மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணிசரவணன்,தொழில் முனைவோர்கள், கல்வியாளர்கள், மென்பொருள் நிறுவனத்தினர், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



கோவை தெற்கு மாவட்டம், சூலூர் வடக்கு ஒன்றியம், பதுவம்பள்ளி பா.ஜ.க. கிளை தலைவர் கிருஷ்ணகுமார், பா.ஜ.க. ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் வி.சரவணகுமார் ஆகியோர் கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். இதில் சூலூர் வடக்கு ஒன்றிய செயலாளர் சிபி.கே.செந்தில்குமார், பதுவம்பள்ளி கழக ஒருங்கிணைப்பாளர் ராஜாமணி, ஒன்றிய நெசவாளர் அணி அமைப்பாளர் குணசேகரன், கிளை கழக செயலாளர் பன்னீர்செல்வம், கிளைத் தலைவர் காளிச்சாமி, ஒன்றிய மாணவரணி துணை அமைப்பாளர்கள் மெய்ஞான சம்பத், விவேக் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மாவட்ட மாற்றுத்திறனாளி நலத்துறையின் சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் வழங்கினர். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே, மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், 4ம் மண்டலத் தலைவர் இல. பத்மநாபன், மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் க.சங்கமித்திரை, ஒன்றிய கழக செயலாளர் கே.கே.சிவானந்தன், பொறுப்பாளர் எஸ்.சிவபிரகாஷ் உள்பட பலர் உள்ளனர்.

### கரூர் மாவட்டம் ஜவுளி தொழிலுக்கு இணையாக

# தகவல் தொழில் நுட்பத் துறையிலும் வளர்ச்சி அடையும்!

## மினி டைடல் பார்க் அடிக்கல் நாட்டு விழாவில் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. தகவல்!

கரூர், மார்ச்.13 -

கரூர் மாவட்டம் ஜவுளி தொழிலுக்கு இணையாக தகவல் தொழில்நுட்ப துறையிலும் வளர்ச்சி அடையும் என மினிடைட்டல் பார்க் அடிக்கல் நாட்டு விழாவில் சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில் பாலாஜி தெரிவித்தார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், கரூர் மாநகராட்சி, கோதை நகரில், ரூ 38.50 கோடி மதிப்பில், 64000 சதுரடியில், தரை மற்றும் 4 தளங்களுடன், அதி நவீன வசதிகள் கொண்ட மினி டைட்டல் பூங்காவிற்கு காணொளி வாயிலாக அடிக்கல் நாட்டினார்கள். இதனைத் தொடர்ந்து நடைபெற்ற விழாவிற்கு கரூர் மாவட்ட கலெக்டர் கு.ரவிக்குமார் தலைமை வகித்தார்.

கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில்பாலாஜி பேசியதாவது:

மினி டைட்டல் பார்க் கரூர் மாநகராட்சியை பகுதியிலேயே அமைய வேண்டும் என இப்பகுதியில் நிலம் தேர்வு செய்யப்பட்டு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.64,000 சதுர அடியில் டைடல் பார்க் பணிகளை துவக்கி வைத்த முதல்வர் அவர்களுக்கு மாவட்ட மக்களின் சார்பில் கோடான கோடி நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். 12 மாதங்களில் இது பயன்பாட்டிற்கு வரும்.

கரூர் மாவட்டத்தில் ஜவுளி உற்பத்தி, ஏற்றுமதி ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிக்கு இணையாக, இந்த டைட்டல் பார்க் மூலமாக தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி ஏற்பட்டு பொருளாதார வளர்ச்சியில் குறிப்பிட்ட இலக்கை எட்டும் என்பதில் சந்தேகம் இல்லை. திராவிட மாடல் 2.0 அரசு அமைவது உறுதி. அப்போது கரூரில் விமான நிலையம் அமைப்பது உள்ளிட்ட கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் இவ்வாறு அவர் பேசினார்.

பின்னர் கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்டக் கழக செயலாளர் வி. செந்தில் பாலாஜி செய்தியாளர்களை சந்தித்தார். அவர்களின் கேள்விகளுக்கு பதில் அளித்து கூறியதாவது:

நலத்திட்ட உதவிகள் தவிர கரூர் மாவட்டத்திற்கு வளர்ச்சித் திட்டங்கள் பணிகள் இதுவரை இல்லாத அளவிற்கு இந்த அரசால் நிறைவேற்ற ப்பட்டுள்ளது. பொது மக்களுக்கு நலத்திட்டங்கள் தொடர்ந்து நாங்கள் வழங்கி வருகிறோம். ஒரு அரசியல் கட்சி 4 ஆண்டு காலம் மக்களை மறந்து விட்டது. தேர்தல் வரும் போது மக்களிடம் செல்கிறார்கள். பத்து ரூபாய்க்கு குங்குமம் பொட்டு வாங்கி கொடுத்து நலத்திட்டம் என்கிறார்கள். ஏன் இவ்வளவு காலம் உங்கள் கட்சித் தலைவரின் பிறந்தநாள் எல்லாம் வரவில்லையா அப்போது ஏன் செய்யவில்லை?. நாங்கள் அப்படி அல்ல. எப்போதும் மக்களுடன்தான் இருக்கிறோம்.



முதல்வர் அவர்கள், துணை முதல்வர் அவர்கள், பிறந்த நாள் என நலத்திட்டங்களை மக்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறோம். கரூர் மாவட்டத்தில் 3 லட்சத்து 30 ஆயிரம் குடும்பத்தினருக்கு முதல்வர் அவர்களின் பிறந்த நாளையொட்டி நலத்திட்ட உதவிகள் வழங்குகிறோம்.

வீட்டைச் சுற்றி மணல் வழக்கு போடாமல் என்ன செய்வார்கள்?.

நாங்கள் ஐந்து ஆண்டுகள் செய்த சாதனைகள், இனி என்ன செய்யப் போகிறோம் என்பதை மக்களிடம் சொல்கிறோம். ஆனால் பிறர் அப்படி செய்கிறார்களா என்பதை நீங்கள் தான் கேட்க வேண்டும். சுவர் விளம்பரம் எழுதியதற்காக எங்களை மண்டபத்தில் கொண்டு போய் அடைத்தவர்கள் இன்று வழக்கு போட்டு விட்டார்கள் என்று வாய் கிழிய பேசுகின்றனர். ஆற்று மணலை வீட்டை சுற்றி வைத்துக் கொண்டு பொய் வழக்கு என்கிறார்கள். மணல் எடுப்பதை கண்டிக்கிறேன் என்று கூறிக்கொண்டு மணலை பதுக்கி வைத்தால் வழக்குப் போடாமல் என்ன செய்வார்கள்?.. தவறு செய்துவிட்டு திருடன் திருடன் என்று கத்திக் கொண்டு ஓடுவதைப் போல இருக்கிறது.

எல்ஜிபி. பெட்ரோல் பங்க் உள்ளிட்ட சொத்துக்கள் எப்படி வந்தது?. மண் வெட்டி எடுத்து சம்பாதிக்கவில்லை. நீங்கள் அந்த நபர்களை பார்க்கும்போது இதை கேளுங்கள். சொத்துக்கள் எப்படி வந்தது என்று. வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக வழக்கு பதிவு செய்ய ஆளுநருக்கு கோப்பு அனுப்பப்பட்டது. ஆளுநர் அதை நிலுவையில் வைத்துள்ளார். ஒப்புதல் தெரிவிக்கவில்லை. வழக்கு தொடர்ந்தால் தெரியும் அவர்களது நிலைமை. ஒரே ஒரு முறை எம்.எல்ஏ ஆனதும் எப்படி என அவரை எதிர்த்து நின்ற வேட்பாளரை கேட்டால் தான் தெரியும். யார் நன்மை செய்வார்கள் என்று மக்களுக்கு தெரியும்.

**அதிகாரத்தில் இருந்தும் ஒன்றும் செய்யவில்லை!**

அ.தி.மு.க. மக்கள் ஆதரவை இழந்து விட்டது. ஒரு அமைச்சர் என்றால் சாக்கடை போடுவது, தெரு விளக்கு போடுவது, ரோடு போடுவது வேலை அல்ல. என்ன சிறப்பு திட்டங்கள் வந்தது என பார்க்க வேண்டும். நாங்கள் சொல்கிறோம். கரூர் மாவட்டத்தில் புதிய வேளாண்மை கல்லூரி, அரவக்குறிச்சியில் அரசு கலைக்கல்லூரி, கரூரில் புதிய பேருந்து நிலையம், காமராஜ் மார்க்கெட், வெங்கமேட்டில் மீன் மார்க்கெட் , நீச்சல் குளம், மாவட்ட மைய நூலகம், முருங்கை பவுடர் தொழிற்சாலை, ஐ.டி பார்க், முதல்வர் படைப்பகம், இப்படி அடுக்கடுக்கான திட்டங்களை கொண்டு வந்திருக்கிறோம். எந்த திட்டங்களையும் கூட அ.தி.மு.க.வால் கூற முடியவில்லை.

மருத்துவக் கல்லூரிக்கு நான் இருக்கும்போது பிற மாவட்டங்களை விட முதலில் அனுமதி வாங்கினேன். ஐந்து ரோடு அமராவதி பாலம். அம்மா சாலை, இரண்டு குகைவழி ப் பாதை, எல்லாம் நான் இருக்கும் போது கொண்டு வந்ததை அவர்கள் கொண்டு வந்ததாக பொய் பிரச்சாரம் செய்து வருகின்றனர். ஆட்சியில் இருந்த போது எதையும் செய்யாமல் இப்போது திசை திருப்பி வருகின்றனர். மக்களிடம் எடுபடாது. இரண்டாவது முறை யாக கரூர் மாவட்டத்தில் உதயசூரியன் நான்கிற்க்கு நான்கு தொகுதிகளிலும் வெற்றி பெறுவோம்.

திராவிட மாடல் 2.0 ஆட்சி மீண்டும் அமைய மக்கள் முடிவு செய்து விட்டார்கள். கரூர் சம்பவம் குறித்து சிபிஐ சம்மன் அனுப்பி உள்ளது. நேரில் ஆஜராகி விளக்கம் அளிப்பேன் இவ்வாறு அவர் கூறினார்.

எம்.எல்.ஏ.க்கள் ஆர் இளங்கோ சிவகாமசுந்தரி மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மற்றும் கழக நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக துணை முதல்வர் வருகை குறித்து கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட அவசர செயற்குழு கூட்டத்தில் மேற்கு மாவட்டச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் ஒய் பிரகாஷ் பேசினார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன், மாநகர மேயர் சத்யா, மாநில கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை துணை செயலாளர் மாதேஸ்வரன், பொதுக்குழு உறுப்பினர் எல்லோரா மணி, துணை மேயர் ஆனந்தய்யா மற்றும் ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 73 வது பிறந்த நாளை முன்னிட்டு கோவை மாநகர், ஆவாரம்பாளையம் பகுதி, 28 இ வட்ட கழகம் சார்பில் வட்ட கழக பொறுப்பாளர் செ. பாலமுரளி கிருஷ்ணன் ஏற்பாட்டில் கேஎம்சிஹச் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தி ஐ ஃபவுண்டேஷன் கண் மருத்துவமனை இணைந்து மாபெரும் இலவச பொது மருத்துவம், எலும்பு மருத்துவம் மற்றும் கண் மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில் பகுதி கழக பொறுப்பாளர் மோகன்ராஜ் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.